உ
சிவமயம்

gistered as a News
paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு மாசி மீ கசு உ (1947 பெப்ரவரி 28 வெள்ளிக்கிழமை)[இலஅசுஉ

# தமிழன் படும்பாடு

(பண்டிதர் சு. நவநீதக்கிருஷ்ண பாரதியார்)

[ அளவெட்டி தமிழ்க்கலை மன்றத்தை ஆரம்பித்து வைக்கையில் பண்டிதர் சு நவநீதக்கிருஷ்ண பாரதியார் செய்த பிரசாரணச் சாரம் ]

சரித்திரக் கண்கொண்டு நாங்கள் முற்கால நிகழ்ச்சிகளைத் துருவியாராய முற்பட்டால், இவ் வியாழ்ப்பாண நாடானது பண்டு தொட்டுத் தமிழ்ப்புலவர்களுக் குரித்தாய நியாயமான கௌரவத்தை அளித்துள்ளமையைக் காணலாம். பாரத நாடுவரை சென்று புகழ்க்கொடி நாட்டிய ஆறுமுகநாவலன் பிறந்த நாடல்லவா இது? சின்னத்தம்பிப்புலவர் சீர்பெற்ற நாடல்லவா இந்த நாடு? சபாபதி நாவலன், சுன்னைக் குமாரசுவாமிப் புலவர் முதலாய பேரறிஞர் மங்காப் புகழ்மிலைந்து, யாழ்ப்பாணமும் தமிழறிஞர் வாழிடம எனப் பிறநாட்டறிஞர்களுக்கு அறிவுறுத்தியதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். ஆனாற் சகோதரர்களே இன்றோ நிலைமை வேறுவிதமாகவுள்ளது. தமிழ் படித்த புலவர்களெல்லாம் ஆங்கிலம் கற்றிலமேயென அழுது சாகவேண்டிய காலம் இது. பல்லாண்டுகளாகத் தமிழ்நூல்களைப் படித்தும் தமது புத்திக்குறைவு காரணமாக ஒன்றும் விளங்கமாட்டாதார் சிலபகல் ஆங்கிலங்கற்றுவிட்டுப் பெருந்தொகைப் பணஞ் சம்பாதிக்குங் காலமையா இது! தமிழ்ப் பண்டிதர்களுக்கு நியாயமான உரிமை வழங்கப்படக் காணேம். சுதந்திரம்! சுதந்திரம்!! சமத்துவம்! சமத்துவம்!! என்றெல்லாம் எங்கும் பெருமுழக்கம்! படித்தவனோடு படித்தவன் சரியாக நடத்தப்படாத நிலையில் சமத்துவம் என்பதற்கு அர்த்தமிருக்கிறதாக எனக்கு விளங்கவில்லை. தமிழ்ப் புலவர்கள் பண்டிதர்களெல்லாம் தீண்டாதவர்களாக மதிக்கப்படுகிறார்கள். சிறப்பாகக்கூறின் தமிழ் படித்தவர்கள் தீண்டாச் சாதிகளாக அடக்கப்படுகின்றனர். கொடுமை! கொடுமை!!

தமிழ் படித்தவர்களெல்லாம் தமிழறியாத் துரைகளை உயிருடன் வாழ்த்தவும் இறந்தபின் சரமகவிகள் பாடவுமே உபயோகிக்கப்படுகின்றனர். ஆங்கிலங்கற்ற காற்சட்டைக்காரர்களை வரவேற்றுபசரிக்குங் கூட்டங்களில் தமிழ்ப்புலவர்களுடைய பாட்டுக்கள் பாடப்படுகின்றன. ஆனால் தமிழ்ப்புலவன் மேடையினின்றும் விரட்டப்படுகிறான் தேரிழுக்கும் வரையும் தீண்டுஞ்சாதி, இழுத்தபின் தீண்டாச்சாதி யென்ற வழக்கமா இது?

ஆங்கிலக் கல்லூரிகளை யெடுத்துக் கொண்டாலும் தமிழ்ப் புலவர்களுடைய நிலை வருந்தற்பாலதே. வீடுகளில் அழகுக்காகச் சில செடிகள் வளர்க்கப்படுகின்றன. சட்டிகளில் வைத்து வளர்க்கும் அச்செடிகள் தம்மிஷ்டமாக வேர்வீழ்க்க இடங்கிடையாதல்லவா? அவை மேனோக்கி வளரலாமென்றாலும் அதுவும் கூடுவதாக இல்லை. இடையிடையே அவற்றின் குருத்துக்கள் கொய்து மட்டமாக்கப்படுகின்றன. இதே நிலைமையில்தான் இன்று கல்லூரிகளிற் கற்பிக்குந் தமிழ்ப்பண்டிதர்களுக்கும் மேல்வளர்ச்சிக்கு மிடமில்லை. தம் நிலைமையைப் போக்கி வேர்வீழ்க்கவும் இடமில்லை இரண்டும் கெட்டான் கதையாகவே தமிழறிஞன்பாடு உள்ளது. கல்லூரிகளில் ஒன்றிரண்டு தமிழ்ப் பண்டிதர்கள் அழகுக்காக மட்டும் வைக்கப்படுகின்றனர். உயரிய அந்தஸ்து இல்லையெனினும் தன்னிஷ்டமாகத் தன் கலையைப் பெருக்கவும் தமிழனுக்கு உரிமை மறுக்கப்படுகிறது. தமிழ்க்கல்வி வாய்க்கப் பெறுதவர்கள் தமிழ் இப்படியிருக்கவேண்டும், அப்படியிருக்கவேண்டும், என்று தம் வாய்க்கு வந்தவாறு பேசுகின்றனர். செய்யுள்கள் இலகுவான நடையில் எழுதப்பட வேண்டுமெனச் சிலர் கூவுகின்றனர், பண்டுதொட்டு இன்று வரையும் தமிழ்ப்புலவர் உயிரெனப் போற்றிவந்த அவ்வொன்றிற்குமாகவே திருக்குறள்முதலாம் அருமருந்தன்ன தெய்வக் கருவூலங்களை ஆங்கிலம் படித்த தமிழ்ப் பிரபுக்கள் விட்டுவைத்தார்கள். இன்று இவ்வித நூலொன்று ஆக்கப்படுமாயின் இவ்வாங்கில அறிஞர்கள்—இல்லை ஆங்கிலவறிஞர்கள் கிழித்தெறிந்தே கோபமாறுவர் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. ஆங்கில அறிவு கொண்டு மட்டும் தமிழ்மொழிக்கு வரைவிலக்கணம் வகுக்க முற்பட்ட இவர் செயல் நேரிதன்று. புலவன் கட்டுக்கடங்காதவன் யாப்பிலக்கணப்பயிற்சிக் கப்பாற்பட்டவன். உணர்ச்சியே அவனது கவிதையின் உயிர். உணர்ச்சித் தூண்டலால் பாடாதிருக்க முடியாமையாற் பாடுபவன் புலவன், எவ்வாறு பாடவேண்டுமென்பது பாட்டுச் சுரப்பதற்கு முன் அவனுலுஞ் சொல்லப்படாது. வெறுஞ் சொற்றொடர்ப் பிணைப்பு பாட்டாகாது இதனைத் தமிழ்நூல் வல்லார் உளங்கொள்ளுதலோடு தமிழ் மரபறியா விஷமிகளது சேஷ்டைகளுக்கு இடங்கொடாது தமிழைப் பரப்புவதும் அன்னார்தங் கடனும்.

தமிழ் மரபு கடந்து தமிழில் நூல்கள் இயற்றப்படலாகாது. பிறநாட்டுக் கதைகளில் அழுந்திய பயிற்சியுடையார் தமிழ்மரபு நோக்காது தமிழிற்கதைகள் அமைத்தல் ஆகாது. பெண்ணொருத்தியைத் தந்தையும் மகனுமாகக் காதலித்ததாகப் பிறமொழியாளர்கள் கற்பனை செய்துள்ளனர். இவ்வித தமிழ் மரபுக்குப் பொருந்தாக் கதைகளைத் தமிழில் இயற்ற முற்படல் பெருங்கேடே. தமிழ் மக்கள் தெய்வத்தன்மை வாய்ந்ததாகக் கற்பனை செய்த அன்பின் ஐந்திணை யொழுக்கத்தில் மாசுமறு வேற்றுதல் தமிழ்ப்பண்பு கடந்த செய்கையாம் ஓடுந் திரைப்படங்கள் இந்நாளில் மிக்குள்ளன. அவற்றிலுந் தமிழ்க்கலைப் பண்புணராப் புல்லறிவாளர் வேலை கொள்ளப்படுதலின் அவை மாறுகின்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# ஒழியவில்லை!

## ஜேர்மன் இரகசிய சதிவேலைகள்

ஜெர்மனியில் ஹிட்லரும் அவர் சகாக்களும் ஒழிந்துவிட்டாலும், அவர்கள் நாட்டிய பயங்கர இயக்கம் இன்னும் ஒழிந்தபாடில்லை என்று தெரிகிறது. சென்ற வாரத்து இறுதியில் ஜெர்மனியை மேற்பார்வை செய்யும் ஆங்கில அமெரிக்க அதிகாரிகள் ஓர் பெரிய இரகசிய ஜெர்மன் ஸ்தாபனத்தைக் கண்டு பிடித்தனராம்.

உலகில் உள்ள வல்லரசுகளை எல்லாம் ஒன்று சேர்த்து, ருஷியாவுக்கு விரோதமாகத் தூண்டிவிடுதலே இந்த ஸ்தாபனத்தின் நோக்கம் என்று தெரிகிறது. இந்த ஸ்தாபனம் பொல்லாத பயங்கரமான இரகசிய ஆயுதங்களைத் தன்னிடம் வைத்திருந்தது என்றும், வல்லரசுகள் தன் இஷ்டத்துக்கு இயைந்து ருஷியாவுக்கு விரோதமாகப் போர் தொடுக்காவிட்டால் அந்த இரகசிய ஆயுதங்களை அவ்வல்லரசுகள்மீது பிரயோகிக்க இந்த ஸ்தாபனம் தயாராக இருந்ததென்றும் சொல்லப்படுகிறது.

இந்தப் பயங்கர ஆயுதங்களில் ஒன்று கிருமிவிருத்தி ஆயுதமாம். இந்த ஆயுதப் பிரயோகத்தினால், பொல்லாத நோய்க் கிருமிகள் உலகிற் பரவி பேதி, பிளேக் முதலாம் நோய்கள் மக்களைப் பீடிக்கும் என்று இப்போது வெளியாக்கப்படுகின்றது.

இந்த ஸ்தாபனத்துத் தலைவர்களில் முக்கியமானவர்கள் யாவரும் இப்போது சிறையாக்கப்பட்டிருக்கின்றனர்.

# வெள்ளையர் அக்கிரமம்

## நிறத்திமிரால் நிகழ்ந்த விபரீதம்

இன்று தென்னாபிரிக்காவிலே பிரிட்டிஷ் மன்னர் தம்பதிகள் சுற்றுப் பிரயாணம் செய்து, சமரசம், சமாதானம் என்றெல்லாம் பிரசாரம்செய்கிறார்கள். அவர்களுடையவிஜயத்தையிட்டு, சில சிறையாளரும் விடுதலை செய்யப்பட்டனர். அப்படி விடுதலை செய்யப்பட்டவர்களில் ஓர் நீகிரோவனும் ஒருவன். இவன் சென்றவாரம் விடுதலை செய்யப்பட்டான்.

நீகிரோவன் விடுதலையாக்கப்பட்டது அங்கிருந்த நிறத்திமிர் பிடித்த வெள்ளையர்க்குப் பிடிக்கவில்லை.

அவன் விடுதலையான 24 மணி நேரத்துக்குள், அவன் ஓர் பாதையில் பிணமாகக் காணப்பட்டான். அவனைக் கல்லால் எறிந்து அவன் மண்டை சிதறுண்டிருந்தது, இந்த அக்கிரமத்தைச் செய்த பாதகர் இன்னும் அகப்படவில்லை.

தென்னாபிரிக்காவிலே, வெள்ளையர் கும்மாளம் இந்த அழகில் நடக்கிறது.

## பாகவதர் கிருஷ்ணன் மநு

சினிமா நடிகர்களான தியாகராஜபாகவதர், என். எஸ். கிருஷ்ணன் இருவரும் சமர்ப்பித்திருந்த மநு லண்டன் உயர்தர நீதிமன்றத்தில் சென்ற திங்கட்கிழமை தொடக்கமாக விசாரணை செய்யப்பட்டு வருகிறது. இன்னும் இரண்டொரு தினங்களில் முடிவு தெரியலாம்.

# இப்பிறவி தப்பினால்....?

## இன்னோர் பிறவி எடுப்பராம்!

"எப்படியாவது என்னுடைய வாணாளுக்கிடையில் இலங்கைக்குப் பூரண சுயராச்சியம் பெற்றுக்கொடுப்பேன். இப்பிறவியில் அது முடியாவிட்டால் இன்னோர் பிறவி எடுத்து அச்சுயராச்சியத்தைப் பெறுவேன்'

மேலே காட்டியவாறு மிஸ்ரர் சேனாநாயக்கா காலியில் நிகழ்ந்த ஐக்கிய தேசியக்கட்சிப் பிரசாரக் கூட்டத்திற் கூறினார்:

மூன்று ஆண்டு காலத்தில் இந்த நாட்டுக்குப் பூரணமான சுயராச்சியம் கிடைக்குமென உத்தரவாதம் தந்திருக்கிறார்கள்: அப்படிப் பூரண சுயராச்சியம் இந்நாட்டுக்குக் கிடைத்ததும், என்னிலும் இளையவர்களை அரசியலை நடத்தவிட்டு நான் இளைப்பாறி விடுவேன் என்றும் மிஸ்ரர் சேனநாயக்கா குறிப்பிட்டார்.

மிஸ்ரர் ஜே ஆர். ஜெயவர்த்தன, சமதர்மிகள் சமசமாஜிகள் கொள்கைகளைக் கண்டித்தார். இந்தச் சமசமாஜிகள் கார்ல் மார்க்ஸ் என்னும் ஓர் ஜெர்மனிய யூதருடைய கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள். இந்தச் சமசமாஜிகளுக்கு மதமில்லை. கடவுள் இல்லை; அரசியல் ஒழுக்கமில்லை. எனவே, இவர்களுடைய பசப்பு மொழிகளில் ஊரவர்கள் ஏமாந்துவிடவொண்ணாது என்று கூறினர்.

## யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோடு

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டு விசாரணை சென்ற திங்கட்கிழமை, நீதியரசர் சேர். பிரான்சின் சூட்ஸ் தலைமையில் ஆரம்பமாயது. இம்முறை விசாரணை செய்யப்படவிருக்கும் வழக்கின் தொகை 20. இவற்றுள் கொலைவழக்குகள் 12.

முதலாவதாக வைரமுத்து பொன்னையா என்னும் ஓர் வயோதிபர் சாகரப்பிள்ளை முத்துக்குமாரு என்பவரைக் கொலைசெய்ய எத்தனித்தார் என்ற வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பபட்டது. ஜூமார் எதிரி குற்றவாளியென அபிப்பிராயம் கூறினர்கள். தீர்ப்பு இன்று கூறப்படும்.

## தேயிலை விலை

சென்ற திங்கட்கிழமை நிகழ்ந்த தேயிலை ஏலத்தில் திறம் தேயிலை இறாத்தல் ஒன்று ரூபா 3-55 வரை விலைபோனது.

மிஸ்ரர் ஏ. ஆர். ஏ. ருஸிக், முஸ்லீமான்கள் ஒருபோதும் சமதர்மக் கொள்கைகளை ஏற்கமாட்டார்கள் என்றும், இலங்கைவாழ் முஸ்லீம்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியிற் சேர்ந்து உழைப்பர் என்னும் கூறினர்.

ஸ்ரீ மகாதேவா, மிஸ்ரர். எச். டபிள்யூ. அமரசூரிய முதலியோரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஞு
மாசிமீ கசுஉ வெள்ளிக்கிழமை

## சைவப் பெண்கள் கலாசாலையிற் கல்விகற்பிக்கும் முறை

I

இந்த யாழ்ப்பாணத்திலே சைவச் சிறுவருஞ் சிறுமிகளுஞ் சேர்ந்து கல்வி பயில்வதாகிய தமிழ்ப் பாடசாலைகள் பல, அநேக வருடங்களாக வுள்ளன; இப்படியான "கலவன்" பாடசாலைகளில், சில காலங்களிற் சில வித்தியாசாலைகளிலே, வளர்ந்த பெண்களும் தமிழ் உயர்தர வகுப்பிற் கல்வி பயின்று வந்தனர்; ஆனல், அக்காலத்திற் சைவப் பிள்ளைகளுக்குச் சைவ முறைப்படி ஆங்கிலக் கல்வி யூட்டுவதற்குச் சைவ ஆங்கில பெண் பாடசாலை இல்லாமையினல், எங்கள் சைவக் கன்னியர்களும், அந்நிய மதத்தினரால் வைத்து நடத்தப்படும் ஆங்கில கலாசாலைகளிலும் மாணவர் விடுதிச் சாலையோடு கூடிய ஆங்கில கல்லூரிகளிலுமே சென்று சேர்ந்து கல்வி கற்க வேண்டியவர்களானர்கள்; இப்படிச் சேர்ந்து கற்றமையினற் சைவசமய விஷயமாகவும், சைவத் தமிழரின் பழைய ஆசார ஒழுக்க விஷயமாகவும் நேர்ந்த அநர்த்தங்கள் பலவெனலாம். அவற்றை இப்பொழுது இங்கே எடுத்துக் காட்டுவது அனவசியகமாகும்.

சைவ மகளிர் ஆங்கிலமும் அதனேடு தமிழும் சைவமுறைப்படி படித்தற்கிருந்த இடையூறுகளைக் கண்டே, ஸேர். பொன். இராமநாதனவர்கள் இற்றைக்குப் பலவருடங்கட்கு முன்னர்ச் சுன்னகத்தைச் சேர்ந்த மருதனமட மெனப்படுந் தானத்திலே சிறந்த சைவமகளிர் ஆங்கிலக் கல்லூரியையும், அதற்காகிய சகல சௌகரியங்களோடுகூடிய விடுதிச்சாலையையும் அமைத்துத் தமிழ்ச் சைவச் சிறுமியருக்கு நல்ல முறையிற் கல்வியூட்டச் செய்துவைத்தார். அக்கல்லூரி இன்றும் நன்கு நடைபெறுகின்றது; அதன் பின்னர் இற்றைக்குச் சில வருடங்கட்கு முன்னர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையார் இந்த யாழ்ப்பாணப் பட்டினத்திலும் அயலிலுமுள்ள சைவச்சிறுமிகட்கு, அதிக செலவின்றி ஆங்கிலக் கல்வி யூட்ட வேண்டுமென்ற நோக்கங் கொண்டு பெண்பிள்ளைகளும் தங்கள் கல்லூரியிற் சேர்ந்து ஆரம்ப ஆங்கிலக்கல்வி படித்தற்காக ஒழுங்குகளைச் செய்தனர்; குறித்த கல்லூரி யதிகாரிகள் அவ்வளவோடமையாது, தங்கள் பரிபாலனத்திலுள்ள கிளை வித்தியாசாலைகளாகிய கொக்குவில், உரும்பராய், காரைநகர் என்னுமூர்களிலுள்ள ஆங்கில கலாசாலைகளிலும் பெண் பிள்ளைகளைச் சேர்த்து ஆங்கிலமுந் தமிழும் பயிற்றுதற்கான ஒழுங்குகளைச் செய்தார்கள்; பெண் பிள்ளைகளை, அவர்களுள்ளும் வயசேறிவரும் பிள்ளைகளை, ஆண் பிள்ளைகளோடு ஒருங்கு வைத்துக் கல்வியூட்டுதல் அழகல்ல என்ற சித்தாந்தம் பல மக்களுடைய உள்ளத்திற் புலப்பட்டமையினற் போலும், இந்துக்கல்லூரி அதிகார சபையார் அக்கல்லூரியிலிருந்த பெண் மாணவரைப் பிரித்தெடுத்து, சமயோசிதமாக ஒரு வித்தியாசாலையை மேற்படி கல்லூரிக்குச் சமீபத்தில் அமைத்து, பெண் ஆசிரியர்களையே நியமித்து அதனை நன்கு நடாத்தி வந்தபோது, பிள்ளைகளின் தொகை காலந்தோறும் அதிகப்பட்டமையினல், அதற்கென நியமித்திருந்த விஸ்தாரமான நிலத்தில் ஒரு கட்டடத்தையமைத்து அதில் வைத்து நடத்து வாராயினர்; யாழ்ப்பாணம் மகளிர் கலாசாலைக்குரிய சாசுவதமான கட்டடம்அந்நிலத்தில் இப்பொழுது கட்டப்படுகின்றது.

இவை இங்ஙனமாக, வடமராட்சிப் பகுதியிலுள்ள சைவச் சிறுமியர்க்குஞ் சைவ முறைப்படி ஆங்கில தமிழ்க் கல்விகளையூட்டவேண்டுமென்ற தூய நோக்கங் கொண்ட புலோலி முதலிய கிராமங்களிலுள்ள சைவ அபிமானிகள், புலோலியிலே மத்திய ஸ்தானத்திலே விஸ்தாரமான நிலந்தேடி, கலாசாலையமைத்துச் சைவ மகளிரின் ஆங்கில கலாசாலையொன்றை முறைப்படி நடத்தி வரலாயினர்; அக்கலாசாலைக்காகிய ஸ்திரமான கட்டடமும் ஒருவாறு நிறைவேறி வருகிறதெனலாம்.

அது அவ்வாறாக இலங்கையின் பிரதான பட்டினமாகிய கொழும்பிலே அக்காலந் தொடக்கம் கிறீஸ்துவர் பௌத்தர் இஸ்லாமியரென்னு மிவர்களால் வைத்து நடத்தப்படும் ஆங்கிலக் கல்லூரி கலாசாலைகள் பலவிருப்ப, இலங்கையிற் குடிசன மதிப்பிலே இரண்டாவதாக வுள்ள சைவத் தமிழ்மக்கள் பொருட்டு தமிழேனும் ஆங்கிலமேனும் பயிற்றுதற்கான ஒரு கலாசாலை தானும் இல்லையெனக் கண்டு, கொழும்பை வாசஸ்தானமாகவும், உத்தியோக ஸ்தானமாகவும் கொண்டுள்ள சைவ மக்களின் உதவியோடு கொழும்பு விவேகானந்தசபையார் தங்கள் சபைத் தானத்திலேயே சிறந்த சைவச் சிறுவர் சிறுமியர்கள் தமிழ்க் கல்வி பயில்வதற்கான சைவவித்தியாசாலை யொன்றைத் தாபித்துச் சிலவருடங்களாக நன்கு நடாத்தி வரலாயினர். அவ்வளவோ டமையாது, கொழும்பில் யாழ்ப்பாண மக்கள் உத்தியோகமாகப் பெரும்பாலும் வாசஞ் செய்யும் இடங்களாகிய பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை முதலிய இடங்களிலுள்ள சைவச் சிறுமியர்க்குங் கல்வியூட்டவேண்டுமென்ற நோக்கத்தினல், சைவமங்கையர் கழகமெனப்படும் ஒரு பெண்பிள்ளைகள் வித்தியாசாலையைத் தாபித்து நடத்தி வரலாயினர், இப்பொழுதுமேற்படிவிவேகானந்த சபையாரும் கழகமகளிரும் ஒருங்கு முயற்சித்து வெள்ளவத்தையிலே சைவச் சிறுமியர் ஆங்கிலத்தையும் தமிழையும் முறைப்படி பயில்வதற்கானஒருசிறந்த கல்லூரியைத் தாபித்தற்கான உத்தமநோக்கங் கொண்டு முயற்சிசெய்து, அம்முயற்சியில் ஒருவாறு அநுகூலமடைந்துவருகின்றனரென அறியக்கிடக்கின்றது; இவைகளையெல்லாம் இங்கு ஏன் எடுத்துக் காட்டுகின்றேமெனின் இலங்கையிலுள்ள சைவச்சிறுமியரின்ஆங்கிலக் கல்வியும்தமிழ்க் கல்வியும் சைவசமய முறைப்படி அவர்களுக்குஊட்டுதலாகிய முயற்சியும்விருத்தியடைகிற தென்பதைப்புகட்டுதற்கேயாம்.

---

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—6)

### "பொற்றலியோடு எவையும் போம்"

"அப்படியானல் மிகவும் நல்லகாரியம் சாமி, உங்களிடத் தல்லாமல் வேறுபேரிடத்தில் என் அந்தரங்க விஷயங்களை வெளியிட எனக்கு இஷ்டமில்லை. விஷயங் கைகூடும்வரையில் இரகசியமாக இருத்தல் வேண்டும்; சொல்லுகிறேன், வேறென்றுமல்ல: கடவுள் எனக்கு எல்லாச் செல்வங்களையும் தந்துவிட்டு, ஒரு செல்வத்தை மாத்திரம் இடையிற்பறித்துக்கொண்டார்; மற்றைச் செல்வங்களெல்லாமிருந்தும் இந்த ஒரு செல்வமுமில்லையானல், அவைகளால் என்ன சுகம்; கல்வியறிவு ஒழுக்கம் அரோக திடகாத்திரம் எல்லாமிருந்தும், ஒருவனுக்குக் கண்ணில்லையாயின், அவன் சன்மமெடுத்ததாற் பயனில்லையென்ற விதமாக, ஆடவனுகப்பட்டவனுக்கு வாய்ந்த மனையாள் இல்லையானல் அவன் வாழ்க்கையினல் என்ன பிரயோசனம்? இல்லாளில்லாத இல்லம் இடுகாடொக்குமென்றும், "பூமேடைக்கொடி யில்லாமனை" யென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றனவே; என் அருமை மனைவி இறந்தும் வருடக்கணக்கிற் காலங்கழிந்தது: "பொற்றலியோடு எவையும் போம்" என்ற பெரியோர் வாக்கியத்தின்படி, எனக்குத் தாரமாக வந்தவள் என்றைக்கு என்னைக் கதறக்கதறக் கைவிட்டுப் பிரிந்துபோனளோ, அன்றைக்கே என் சுகமெல்லாம் இழந்தேன்: சுவாமீ, உங்களைத் தெய்வமாகப்பாவித்துச் சொல்லுகிறேன், என்னிடத்

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

---

# குறிப்புக்கள்

### பாகிஸ்தானம்?

பிரதமர் அட்லி தம் அறிக்கையைப் பிரகடனப்படுத்திவிட்டார். அவ்வறிக்கைப்படி, பிரிட்டிஷார் 1948-ம் ஆண்டு ஜூன் மாதத்துக்கு முந்திப் பாரதநாட்டை விட்டு வெளியேறவேண்டும். இந்த நல்லகுணம் இப்போதாவது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளுக்குப் பிறந்ததையிட்டு அவர்களை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது, ஆனல் ஓர் அறிக்கையை விடுப்பது, பின் அதற்கு ஓர் வியாக்கியான அறிக்கை வெளியிடுவது, அதே வியாக்கியான அறிக்கைக்கு இன்னேர் விளக்கம் கொடுப்பதுபோன்ற "சேஷ்டை" களை ஏகாதிபத்தியவாதிகள் இனியும் இந்தியா விஷயத்திற் செய்யாதிருப்பர் என்று நம்புகிறோம். மூன்றும் ஆள் இருக்கும் வரையும்தான், பாரத சுதந்திரம் தடைப்பட்டு நிற்கிறது என்று இனிப் பாரதமக்கள் கூற முடியாது. பாரதநாடு முன்னைய உன்னத நிலையை அடையவேண்டும். உலோகாயத இருள் சூழ்ந்துள்ள அகிலத்துக்கு ஆன்மார்த்தீகமென்னும் ஞானதீபத்தை ஏற்றும் பொறுப்பு இன்று ஹிந்துஸ்தானத்தைச் சார்ந்துள்ளது. இந்தப் பணியை ஆற்ற ஆரியநாடு பலங்கொள்ளவேண்டும். ஒற்றுமையுற வேண்டும். இவ்விஷயத்தில் இனியும் ஜின்னக் கும்பலைத் திருப்திசெய்வது என்பது முடியாதவிஷயம். கருதிய கருமம் கைகூடும்வரை ஹிந்துஸ்தான மக்கள் சரியாக ஒத்துழைக்கவேண்டும். ஹிந்துமதத்தை உலகிற்குக் காட்டிய பாரதவர்ஷம், இனியும் ஹிந்துக்கள் ஸ்தானமாக விருக்குமன்றி அங்கே பாகிஸ்தானுக்கு இடமேயில்லை என்பதை வீரபாரத புருஷர் தம் தியாக சிந்தையால், சலியா உழைப்பால் உலகிற்குக் காட்டுவாராக. வாழ்க பாரதம்! வாழ்க ஹிந்து தர்மம்!

### கொழும்புச் சைவமங்கையர் கழகம்

இந்த இலங்கையின் பிரதான பட்டினமாகிய கொழும்பில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வதிகின்றனர். அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஹிந்துதர்ம முறையில், ஹிந்து சுற்றுடலில், கல்வியூட்டத்தக்க ஓர் கல்வி ஸ்தாபனம் இத் தலைப்பட்டினத்தில் இல்லாமையை யிட்டு சைவத் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும். ஹிந்துக்கள் நிலைமை இப்படியிருப்ப, அக்கொழும்புமாநகரில் கிறிஸ்தவர், இஸ்லாமியர், பறங்கியர் முதலாம் சிறுபான்மையினர் பல கல்வி நிலையங்களை அமைத்துத் தம் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டுவதோடு, மற்ற மதத்துப் பிள்ளைகளையும் அங்கேஇழுத்துத் தம் நாகரிகத்தைப் பழக்கவழக்கங்களைப் புகட்டி வருகிறார்கள். இந்த ஸ்தாபனங்களில் அநேக ஹிந்துப் பிள்ளைகளும் கல்வி கற்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. ஹிந்துக்களுக்கு நேர்ந்துள்ள இந்த அவமானத்தை நீக்க, எங்கள் புராதன தர்மமுறைப்படி எம் பிள்ளைகளுக்குக் கல்வியூட்ட கொழும்பு சைவமங்கையர் கழகம் செய்யும் முயற்சியை நாம் பாராட்டுகிறோம். இக்கழகத்தினர் தாம் இப்போது வைத்து நடாத்தும் வித்தியாலயத்தையே ஓர் பெரிய ஹிந்துப்பெண்கள் கல்லூரியாக்க முயற்சித்து, அதற்கென நிதியும் திரட்டி வருகிறார்கள். இந்த முயற்சி வெற்றியடைய வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும். ஏற்கெனவே கழகத்தினர் ஓர் தொகைப் பணத்தைச் சேகரித்துவிட்டனர். ஆனல் இது போதாது என்று அறிகிறோம். எம் ஹிந்துமதம் தழைக்க, எம் கான்முளைகள் எம்புனிதமான மதக்கோட்பாடுகளை யுணர்ந்து சநாதன தர்ம முறைப்படி வாழ, அதன் பயனாக எங்கள் சந்ததியார் மேலோங்க, சைவமங்கையர் கழகம் மேற்கொண்டுள்ள இச்சிறந்த திருப்பணி சீக்கிரத்திற் செவ்வனே நிறைவேற ஒவ்வொரு ஹிந்து ஆடவனும் பெண்மணியும் தன்னல் இயன்ற உதவியைப் புரிய எம்பெருமான் அருள் புரிவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை யாருக்கு? சிங்களர்க்கா?

## வகுப்புவாதக் கும்பல்கள் கும்மாளம்

### டக்ரர் கொல்வின் சில்வாவின் பேச்சு

"வகுப்புவாதம் என்னும் நஞ்சு இனியும் இந்த இலங்கையில் அரசியல் வானத்தைப் பங்கப்படுத்த வொண்ணுது. இங்கே ஓர் சிலர் தமிழ்க்காங்கரசின் பெயரைச் சொல்லிக்கொண்டு வகுப்புவாதப் பிரசாரம் செய்கிருர்கள். இதன் பயன் தென் இலங்கையில் என்னுகும்? இவர்களுக்குப் போட்டியாக அங்கேயும் வகுப்புவாதிகள் கிளம்பி இந்த வகுப்புவாத நஞ்சைக் கக்குவர். இந்த உண்மையைத் தமிழ் மக்கள் உணரவேண்டும்" என்று இலங்கைச் சமசமாஜக் கட்சித் தலைவரான டக்ரர் கொல்வின் ஆர். டீ. சில்வா, சென்ற ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் பிள்ளையார் கோவில் முன்றிலில் நிகழ்ந்த ஓர் பிரமாண்டமான கூட்டத்திற் கூறினர்.

இக்கூட்டம் வட இலங்கையில் உள்ள சமசமாஜிகள் ஆதரவிற் கூட்டப்பட்டது. டக்ரர் கொல்வின் ஆர். டீ. சில்வா சுன்னுகத்திற்கு வந்ததும் ஊர்வலமாக மேளவாத்திய சகிதமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

சமசமாஜக்கட்சி அபேட்சகராகக் காங்கேசன்துறைத் தொகுதியில் முன்வந்துள்ள வழக்கறிஞர் ஸ்ரீ பீ. நாகலிங்கம் இலங்கைவாழ் சகல மக்களும் பூரண சுதந்திரத்துக்கு உழைக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

டக்ரர் கொல்வின் ஆர். டீ சில்வா வகுப்பு வாதிகளின் பிரசாரங்களைக் கண்டித்து, இனியும் இலங்கையில் வகுப்புவாதத்துக்கு இடமில்லை என்ருர். ஐக்கிய தேசியக்கட்சி விஷயமாக டக்ரர் சில்வா பின்வருமாறு கூறினர். "இக்கட்சி ஐக்கியதேசியக் கட்சி என்ற அழகிய பெயரை வைத்திருக்கிறதுஎன்பது உண்மை. ஆனல் இது உண்மையில் ஐக்கியத்தையோ, தேசியத்தையோ மக்களிடையே பரப்ப முடியாத ஓர் சமயசஞ்சீவிகளின் கும்பலாகும். இக்கட்சி இன்றுவரை தன் அபேட்சகர்கள் யார் யார் என்று நிதார்த்தமாகக் கூற முன்வரவில்லை. அப்படிக் கூறினல் அதில் இப்போது தொங்கியிருக்கும் அரைவாசிப்பேர் அதனை விட்டுக் கழன்று விடுவர். இக்கட்சி தேசிய நோக்குடையதல்ல. சோல்பெரித் திட்டத்தின் மூலம் இந்த இலங்கையைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு விலைபேசி எழுதிக்கொடுத்த செனுயக்காக் கும்பல் எப்படித் தேசியவாதிகளாக நடிக்க முடியும்? இன்று இலங்கை இலங்கையர்க்கே என்று செனுயக்காக் கும்பல் கூறுகிறது. ஆனல் நாளைக்கு இதே கும்பல் இலங்கை சிங்களர்க்கே என்றும் கூக்குரல்போடக் கூடும். அப்படிப்பட்ட தடித்த வகுப்புவாதிகளைக் கொண்டதே இந்த ஐக்கியதேசியக் கட்சிக் குழு"

ஸ்ரீமான்கள் வி. சோமசுந்தரம், பேரின்பநாயகம், தர்மகுலசிங்கம் முதலியோரும் பேசினர்.

## கலகம விளையாது!

பிரபல இந்திய மிதவாதத் தலைவரும், அகில இந்தியச்சட்ட வல்லுநருமாகிய ஸ்ரீ ரீ. ஆர். வெங்கிட்டராமசாஸ்திரியார் ஓர் வழக்கில் சாட்சியம் கொடுப்பதற்காக இப்போது இலங்கைக்கு வந்துள்ளார். அவரை ஓர் பத்திரிகை நிருபர் கண்டு இந்திய அரசியல் விஷயமாக அவருடன் சம்பாஷித்தார்.

இராஜப்பிரதிநிதி வேவலைப் பதவியினின்று நீக்கியது குறிப்பிடத்தக்கதோர் விஷயம். பாவம், அந்த மனுஷனை ஜின்ன கைவிட்டபடியாலேயே அவர்க்கு இக்கதி நேர்ந்துவிட்டது. அரசியல் நிர்மாணசபையிற் சேருவதாக வாக்குப்பண்ணி இடைக்கால அரசாங்கத்தில் லீக்கரைச் சேர்ப்பித்த ஜின்ன பின் அரசியல்நிர்மாணசபையிற் சேர மறுத்தமையே வேவலின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று ஸ்ரீ சாஸ்திரியார் கூறினர்.

முஸ்லிம்லீக்கர் இல்லாது அரசியல் நடைபெற்ருற் கலகம் விளையாதோ என்று பத்திரிகைநிருபர் கேட்டதற்கு: "இப்படிநினைப்பது மௌட்டீகம், ஓர்போதும் உள்நாட்டுக் கலகம் விளையாது. ஆகமிஞ்சினல் சில குழப்பங்கள் ஏற்படும். அவ்வளவுதான்" என்று சாஸ்திரியார் பதிலிறுத்தார்.

## ஸ்ரீ நடராஜாவுக்கு நீதியரசர் பதவி

பிரபல நியாயவாதியான ஸ்ரீ என் நடராஜா சுப்பிறீம்கோட் நீதியரசராக நியமிக்கப்படுவார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

## காலத்தின் கோலம்

### மாடமாளிகை கட்ட மந்திரிகள் நிச்சயம்

இலங்கையின் புதிய பாராளுமன்றம், மந்திரசபைகூடும் மாளிகை, பிரதம மந்திரியின் காரியாலயம், மற்றும் மந்திரிமாரின் காரியாலயங்கள், பல்வேறு பகுதிகளுக்குரிய கட்டிடங்கள்; என்பனவற்றைப் புதிதாகக் கட்ட, இலங்கை மந்திரசபையினர் இப்போது திட்டம் வகுத்திருக்கிருர்கள்.

இக்கட்டிடங்களை அமைப்பதற்கு 2 கோடியே 25 லட்சம் ரூபா செலவாகும் என இப்போது கணிக்கப்பட்டிருக்கிறது.

உலகிலே சிறந்த விற்பன்னர்களைக் கொண்டே இக்கட்டிடங்களை நிருமாணிக்க இலங்கையரசாங்கம் நிச்சயித்திருக்கிறது. இந்த விற்பன்னர்களுக்கும் சிற்பிகளுக்கும் - அவர்கள் படம் போட்டுக் கொடுப்பதற்காகக் கட்டிடச் செலவில் 100-க்கு ஒரு விகிதமாக வேதனம் அளிக்கப்படுமாம்.

இக்கட்டிடங்களை நிருமாணிக்க மூன்று சிறந்த பிரபல்ய சிற்பிகளின் சேவை தேவைப்படும் என்றும், அவர்களை இங்கே அழைத்து ஏற்ற ஒழுங்குகளைச் செய்ய 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபா செலவாகும் என்றும்மந்திரசபையினர் கணித்திருக்கிருர்கள.

என்னே காலத்தின் கோலம்! இந்த நாட்டில் லட்சக்கணக்கான மக்கள் மழை, வெயில் பனி, குளிர் என்பவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும் குடிசைகளுக்கும் வழியில்லாது, தெருக் கான்களிலும், மரநீழல்களிலும் ஒதுங்கி வாழுகின்ருர்கள். இவர்களுக்கு ஓர் ஒதுக்கிடம்தேடிக் கொடுக்க வகையறியாது, இத்தகைய பிரமாண்ட மாளிகைகளை நிர்மாணித்து அதே ஏழைமக்கள் வரிப்பணமாகக் கொடுத்த பணத்தை விருதாவிற் செலவழிக்க உத்தேசித்துள்ளனர் இந்நாட்டு மந்திரிகள்! ஆரொடு நோவோம்! ஆர்க்கெடுத்துரைப்போம்.

# பிரிட்டிஷ் வர்த்தகம்

## எதிர்காலம் என்ன?

இப்போது ஏகாதிபத்திய பரஸ்பர சுங்கவரிச் சகாய முறை பிரிட்டிஷ் நாடுகளில் அமுலில் இருந்து வருகிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் உள்ள நாடுகள் ஒன்றுக்கொன்று இறக்குமதித் தீர்வை விஷயத்தில் சகாயஞ் செய்வதே இந்த முறையின் நோக்கம். இது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளுக்குப் பொதுவானது என்ருலும், இங்கிலாந்துக்கே விசேஷமான நன்மை யளிப்பதாகும் ஜப்பான், ஜெர்மனி முதலிய நாடுகளின் பொருள்கள் பிரிட்டிஷ் நாடுகளில் அபரிமிதமாக இறக்குமதியாகாமல் தடுப்பதற்கே இந்த முறை அக்காலத்தில் அநுட்டானத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இப்போது ஜப்பான், ஜெர்மனி என்னும் நாடுகளின் எதிரிடை இங்கிலாந்துக்கு இல்லை. ஆனல், அமெரிக்காவின் எதிரிடை கூடிய சீக்கிரத்தில் அதிகமாகலாம்.

ஏகாதிபத்திய பரஸ்பர சுங்கவரிச் சகாயமுறை அமுலில் இருக்கும்வரை பிரிட்டிஷ் நாடுகளில் தன் சரக்குகளை விற்பது துர்லபம் என்பதை அமெரிக்கா உணர்கிறது. இந்த பரஸ்பர சுங்கவரிச் சகாயமுறையை மாற்றவேண்டும் அல்லது ஒழிக்கவேண்டும் என்றும், அப்படிச் செய்தால்தான், இங்கிலாந்துக்குத் தான் கடன்கொடுக்க முடியுமென்றும் அமெரிக்கா ஓர் நிபந்தனை விதித்தது.

இப்போது இந்த விஷயத்தைப்பற்றி ஆலோசிக்க இங்கிலாந்து ஏகாதிபத்திய நாடுகளைக்கொண்ட ஓர் மகாநாட்டை அடுத்தமாதம் லண்டனிற் கூட்ட அரசாங்கம் நிச்சயித்திருக்கிறது.

அந்த மகாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாக இப்போது லண்டனில் இலங்கை யரசாங்கத்தின் பிரதிநிதியா யுள்ள மிஸ்ரர் ஜீ. வி. எஸ். கொறியா சமுகமளிப்பார்.

# இன்னேர் அறிக்கை வருமா?

## இடைக்கால அரசாங்கம் சீர்ப்படுமா?

1948-ம் ஆண்டு ஜூன் மாதத்துக்கு முன் பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு மூட்டை முடிச்சுக்களுடன் அகன்றுவிடுவர் என்பது நிச்சயமானல் அவர்கள் அப்படிப் போகும்போது, அதிகாரத்தை யாரிடம் ஒப்படைப்பர்? இப்போது பிரிட்டிஷ்-இந்தியாவில் அதிகாரம் விரும்பிய கட்சிகள் இரண்டு: ஒன்று காங்கிரஸ், மற்றது முஸ்லிம் லீக். இந்த இரண்டு கட்சிகளுக்குமிடையே ஒற்றுமை ஏற்படாவிட்டால் நடப்பது என்ன? இந்த விஷயமாக பிரபல பிரிட்டிஷ் பத்திரிகையான "மான்செஸ்ரர் கார்டியன்" ஓர் கட்டுரை எழுதியுள்ளது. இந்தியாவை ஓர்போதும் துண்டாக்கக் கூடாது. துண்டாடினல் உலகசமாதானத்துக்கே ஆபத்து ஏற்படும். முஸ்லிம்லீக், காங்கிரசுடன் இணங்கிப் போகாவிட்டால், பிரிட்டிஷ் அரசாங்கம், அதிகாரத்தைக் காங்கிரசின் கைக்கு மாற்றி ஆளுவதைவிட வேறு வழியில்லை என்று அப்பத்திரிகை கூறுகிறது.

* *

### இன்னேர் அறிக்கை?

இடைக்கால அரசாங்கத்தில் இப்போது முஸ்லிம்லீக் மந்திரிகள் ஓர் பக்கமாகவும், காங்கிரஸ் வாதிகள் ஓர் புறமாகவும் இருக்கிருர்கள். அங்கே ஒற்றுமை என்பது இல்லை. இவ் விஷயமாகப் பண்டிதர்நேரு பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குக் கண்டிப்பாக எழுதினர். அதற்கு இதுவரை பதில் இல்லை. பிரிட்டிஷ் பிரதமர் கண்டிசி யாக விடுத்த அறிக்கையில் தானும் இதனைப்பற்றி எவ்விதமான பேச்சும் இல்லை. இதற்குக் காரணம் என்ன? இடைக்கால மந்திரசபையில், காங்கிரஸ்வாதிகளும், லீக்கர்களும் பூனையும் நாயும்போல இனியும் வாதிடத்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் விடப்போகிறதா? அப்படியான ஊழல்கள் இனி நடவாது என்று விஷயமறிந்தவர்கள் பேசிக்கொள்ளுகிருர்கள். மவுன்ற்பேற்றன் பிரபு இந்தியாவுக்கு வந்து கடமை ஏற்றதும், பிரிட்டிஷ் பிரதமர் ஓர் அறிக்கை விடுவார் என்றும், ஜனநாயக ஆட்சிச் சம்பிரதாயங்களின்படியே இடைக்கால அரசாங்கம் நடைபெறவேண்டும் என்றும், கட்சிகள் மனம்போனவாறு கருமம் ஆற்ற முடியாது என்றும் அவ்வறிக்கையில் பிரிட்டிஷ் பிரதமர் குறிப்பிடுவார் என்று இவர்கள் கூறுகிருர்கள்.

* *

### அரசியல் நிர்மாணசபை

அரசியல் நிர்மாணசபை இனித் தன் கருமங்களை மிகவும் ஜரூராக ஆற்றும் என்பதற்கான உற்பாதங்கள் தென்படுகின்றன. அரசியல் நிர்மாணசபை தயாரிக்கும் அரசியலை முஸ்லிம்லீக்கர் ஏற்றுக்கொள்ளாவிட்டால், பிரிட்டிஷார் ஏதும் சாக்குப் போக்குக்கூறி இந்தியாவில் தம் அதிகாரத்தை நிலைநாட்ட வழிதேடுவர் என்ற பயம் இப்போது இல்லை. எப்படியோ பிரிட்டிஷார் அகன்றுவிடப் போகிருர்கள்; இந்த ஒரு விஷயமுமே சகல மக்களையும் ஒற்றுமையாக்கும் என்று யூகிக்க இடமிருக்கிறது, இப்போதுள்ள நிலைமைப்படிக்கு வங்காளமும் சிந்தும்தான் லீக்கரின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. இந்த இரண்டு மாகாணங்களும் ஐக்கிய இந்தியாவிற் சேர விரும்பாவிட்டால் அவை தனித்தியங்கி பூரண சுதந்திரம் பெற்றுள்ள மாகாணங்களாக இருக்கலாம். அந்த இரு மாகாணங்களையும் இந்திய சமஷ்டியிற் சேர்க்க எவரும் பலவந்தப்படுத்தமாட்டார். ஆனல் இந்த இரண்டு மாகாணங்களும் தனித்தியங்கச் சக்தி வாய்ந்தனவா?

* *

### வங்கத்தின் நிலை

வங்காளத்தில் முஸல்மான்கள் 100-க்கு 55 விகிதம் வரையிலேயே உளர். ஹிந்துக்கள் 45 விகிதமாக இருக்கிருர்கள். கிழக்கு வங்காளத்தில் முஸல்மான்கள் பெரும்பான்மையினராகவும் மேற்கு வங்கத்தில் ஹிந்துக்கள் பெரும்பான்மையினராகவும் வதிகின்றனர். வங்காளத்தைத் தனி முஸ்லிம் இராச்சியமாக்க 45 விகிதத்தினராய ஹிந்துக்கள் ஓர்போதும் அநுமதிக்க முடியாது. அப்படி நடைபெறுவதாயின், மேற்குவங்காளத்தைப் பிரிக்கவேண்டும் என்று இப்போதே ஹிந்துக்கள் கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். மேற்குப்பாகம் போய்விட்டால் வங்கத்தின் செல்வம் அதோகதிதான்.

* *

### ஜின்னுவின் நிலை

இந்தியாவின் அரசியல் மாற்றங்கள் இவ்வாருகஇருக்க, ஜனுப்ஜின்ன பாகிஸ்தான் கனவு காண்கிருர். பாகிஸ்தானில் ஓர் அணுவளவு குறைந்தாலும் ஒப்புக்கொள்ள முடியாது என்று ஜின்ன ஓர் அறிக்கை விடுத்திருக்கிருர். இவருடைய கூற்றுக்கு இந்திய முஸல்மான்கள்தான் ஆதரவு

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேசர் காவியம்

— இறைமணி —

வராமதேவன் மகன் குளக்கோட்டன். இவன் காலம் திட்டமாகக் கூறமுடியாதது. திருகோணமலையில் சிவலிங்க ஸ்தாபனம் சமைத்து, கோயிற் திருப்பணி முடித்தவன் இவனே, இக்கோயிலுக்கு நாடோறும் பூசை தவறாது நடைபெற வேண்டி இவன் காரைக்கால், மருங்கூர் முதலிய இடங்களிலிருந்து நால் வகை வருணத்தாரையும், குடிமக்களையும் இங்கழைப்பித்துக் குடியிருத்தியதாக வரலாறுண்டு

குளக்கோட்டன் செய்த பணிகள் பல. அவற்றுள் முக்கியமான சில செய்திகள் பிற்காலப் புலவர்களால் பாடல்களாகவும், உரைகளாகவும் விதந்தோதப்பட்டன. இவனைப்பற்றிய செய்திகள், 'கோணேசர் கல்வெட்டு', 'யாழ்ப்பாண வைபவம்', 'பத்ததி' முதலிய நூல்களிற் காணப்படுகின்றன. திரிகோணேசல புராணமும் இவனைப்பற்றிக் கூறுகின்றது.

இவன் கோயிலும் குளமும் இயற்றிப் பணிபிரித்த வரலாறு காவியமாகவும் வழங்கி வருகிறது. இது 'கோணேசர் காவியம்' என்றே கூறப்படுகிறது. இதன் ஆக்கியோன் யாரென்பது புலப்படவில்லை. இது சுமார் அரை நூற்றாண்டுகட்குமுன் இயற்றப்பட்டிருக்கலாமெனப் பலர் அனுமானிக்கின்றனர். இது தனித்த ஓர் ஏகவற்பாவாகவே காணப்படுதலன்றி நூல் வடிவமாக இல்லை. நூற்றுக்கதிகமான அடிகள் காணப்படுகின்றன. குளக்கோட்டன் திருப்பணி செய்ததும் பின்னர் காவலும் நியமமும் அமைத்ததும் ஈண்டுக் கூறப்படும் செய்திகளாகும். இனி.

தென்கோணலிங்கர் சிவாயநம.

இராமரையுந் தம்பியையும்
 இன்பமுடன் வணங்கி
மனுநீதி கண்டனையும்
 மன்னனையும் தான்தொழுது
பூதப் படையைத்
 புகழுடனே தானழைத்து
ஆனைக் கலப்பை
 அதிகமுட னேபூட்டி
பூட்டி யுழுது
 புதுக்குளங்கள் தானமைத்து
இரண மடுவும்
 இன்பமுட னேவகுத்து
தென்கோண லிங்கர்
 சிவனை யடிவணங்கி
உந்தனுக்குப் பூசை
 உவந்துகொள்ளுமென் றுசொல் [வி
கல்வி லெழுதிக்
 கருணையுட னேகொடுத்து
கண்ணகைத் தாயைக்
 காவலாய்த் தானிறுத்து
நீலாசோ தயனை
 நியமமுட னேநிறுத்தி
மங்கலங் கூடவத
 னரையுற் தாள்நிறுத்தி
காக்காவத னனையுங்
 காவலாய்த் தான்நிறுததி
சிந்தூர டாளுஞ்
 சிறந்தொரு வன்னிபமும்
தானம் வரிப்பத்தும்
 சகலரையும் தான்நிறுத்தி
தென்கோண லிங்கர்
 சிவனருகே சென்றென்றும்
மங்கா திருக்க
 வழியேதென் றுன்னிடபின்
மன்னன் குளக்கோட்டன்
 மரக்கலத்தி லாளனுப்பி
தென்னாடு காரை
 சிறந்த மருங்கூரில்
உள்ள குடிபலவும்
 உயர்ந்தகுடி மறையோரும்
கொண்டு வரச்செய்து
 கோணலிங்கர் பூசைதனில்.

..........................

என்று தொடரும் இச் சிறு காவியம் ஒருசில சரித்திர உண்மைகளை உள்ளடக்கியிருத்தல் உணரற்பாலது.

## இன்னோர் அறிக்கை வருமா?

3-ம் பக்கத் தொடர்ச்சி

அளிக்கின்றனரேயன்றி வெளியுலகில் உள்ள முஸ்லிம்கள் அனைவரும் இவர்விடாகண்டதனத்தை கண்டிக்கிறார்கள். இந்திய சுதந்திரத்தின் பரம விரோதி இவர்தான் என்று உலக முஸ்லீம்கள் இவரைக் கணிக்கின்றனர். ஏன்? பலஸ்தீனத்தில் துண்டடும் பிரச்சினையையும், எகிப்தில் சூடானைப் பிரிப்பதையும் உலக முஸ்லிம்கள் பலமாக எதிர்க்கையில், இக்தியாவைத் துண்டாடுவதை அவர்கள் எப்படி ஆதரிக்க முடியும்,

* *

### மகாத்மாவின் பீகார் விஜயம்

மகாத்மாகாந்தியடிகள், சமீபகாலத்தில் பீகார்க்கு விஜயம் செய்து. வகுப்புக் கலகங்களாற் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, மீண்டும் கீழ்வங்கத்துக்கு வருவார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

* *

### மகாத்மாவின் கூற்று

கிழக்கு வங்காளத்தில் இப்போது சுற்றுப் பிரயாணஞ் செய்யும் மகாத்மாகாந்தியடிகளை இப்போது ஏற்பட்டுள்ள புதிய நிலைமை சம்பந்தமாகக் கேட்டதற்கு, இனியும் இந்தியர் பிரிட்டிஷாரைக் குறைகூறமுடியாது என்றும், சகல சமூகத்தினரும் ஒற்றுமைபூண்டு பாரதநாட்டை முன்னேற்றப் பாடுபடவேண்டும் என்றால் குறிப்பிட்டார்.

* *

### பாஞ்சாலத்தில் லீக்கர் ஆர்ப்பாட்டம்

பாஞ்சாலத்திலே, மாகாண அரசாங்கத்துக்கு விரோதமாக லீக்கர் செய்யும் ஆர்ப்பாட்டங்கள் இன்னும் ஒழிந்தபாடில்லை, சட்டத்தைமீறி, ஊர்வலங்கள் எடுத்துச் செல்வதும், பலர் கலைக்கப்படுவதும் சிலர் சிறைப்படுவதும் இப்போது அங்கே சர்வ சாதாரணமாகிவிட்டது. பாஞ்சால அரசாங்கத்துக்கும் லீக்கர்க்குமிடையே ஓர் சமரசத்தை ஏற்படுத்தச் செய்த முயற்சிகள் இதுவரை பலன் அளிக்கவில்லை.

# கொள்ளையா? நட்டஈடா?

## ஜெர்மன் பொருள்கள் திருட்டுச் சொத்து

[ஜெர்மனிதோல்வியடைந்தபின் அந்நாட்டினிடம் நட்டஈடு கோரியிருக்கும் வல்லரசுகளின் நடத்தையைக் கண்டித்து பிரபல இந்தியப் பொருளாதாரநிபுணர் ஆசிரியர் குமரப்பா பின்வருமாறுஎழுதுகிறார்: இந்தியா ஜெர்மனியிலிருந்து நட்டஈட்டுப் பொருளாக எதனையும் வாங்கவொண்ணாது என்பதே ஸ்ரீஜுத் குமரப்பாவின்வாதம். இக்கட்டுரை தமிழ் ஹரிஜன் பத்திரிகையிலிருந்து அநுவதிக்கப்பட்டுள்ளது ]

நாதிர்ஷா என்பவன் கொள்ளையடிப்பதற்காக இந்தியாமீது படையெடுத்துவந்தான். அவன் வந்து ஏராளமான தங்கத்தையும் நகைகளையும், நவரத்தினங்களையும் கொண்டு போனான், ஆனால் இந்தக்காலத்தில் கொள்ளையடிப்பவர்கள் விரும்புவது அத்தகைய பொருள்களையன்று. அவர்கள் உற்பத்தி சாதனங்களையும் கைத்தொழிலுக்கு வேண்டிய விளைபொருள்களையும், செய்த பொருள்களை விற்பதற்கு வேண்டிய சந்தைகளையுமே விரும்புகிறார்கள். இத்தவிதமான கொள்ளையில் நாட்டமுடையவர்கள் இருப்பதால்தான் யுத்தங்கள் ஏற்பட்டு வருகின்றன.

### சர்வதேசக் கழுகுகள்

முதல் உலக மகாயுத்தம் நடந்தபின், அதில் வெற்றிபெற்றவர்கள் தோற்றுப்போன ஜெர்மனியிடமிருந்து அதன் குடியேற்ற நாடுகளைப் பிடுங்கிக்கொண்டதோடு யுத்தத்தால் ஏற்படும் சேதங்களுக்கு நஷ்டஈடு தரும்படியும் கேட்டார்கள்.

இப்பொழுது மறுபடியும் ஜெர்மனியே தோல்வியடைந்திருக்கிறது. சர்வதேசக் கழுகுகள் பிணங் கிடக்கும் இடத்தில் கும்பலாகக் கூடியிருக்கின்றன. வெற்றிபெற்ற தேசங்களில் பிரதானமானவற்றின் பிரதிநிதிகள் சபையார் ஜெர்மனியின் கைத்தொழில் சாதனங்களைத் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொள்ளத் திட்டம் போட்டிருக்கிறார்கள். இந்தியாவும் இந்த உடன்படிக்கையில் சேரும்படி செய்யப்பட்டிருக்கிறது, யாரால் என்று தெரியாது.

### கொள்ளையிற் பங்கா?

களவுசெய்த பொருள் என்று தெரிந்துகொண்டு அதை வாங்கினால் நாமும் களவுக்குப் பொறுப்பாளிகளாவோம். இந்தியா இந்த யுத்தத்தில் சேராமலே இருந்தது. அந்த அளவுக்க இந்த யுத்தத்தை ஆரம்பித்து நடத்திய பெருங்குற்றம் அதன் தலையில் சுமக்காதிருக்கிறது. பொறுப்பு ஏற்காதிருந்துவிட்டு இப்போது கொள்ளையில்மட்டும் பங்கு கேட்கலாமா?

வெற்றிபெற்ற நாட்டார் "நஷ்டஈடு" என்று கூறிக்கொண்டு ஜெர்மன் யந்திரங்களை எடுத்து வருகிறார்களே, அவற்றை நாம் வாங்கவும் கொண்டு வரவும் செய்யலாமா? 51 ஜெர்மன் யுத்த யந்திரசாலைகள் விற்பனைக்கு வந்திருக்கின்றன; அவைகள் அநியாயத்தாலும், கொடுமையாலும், பேராசையாலும், ரத்தவெறியாலும் கறைப்பட்டிருக்கின்றன, இவைகளை நாம் வாங்கலாமா? வாங்கினால்நாமும் பிரிட்டிஷாரைப்போலவும், அமெரிக்கர்களைப் போலவும் ஏகாதிபத்தியப் பித்தர்களேயாவோம். இந்தியாவானது அடிமையாக்கப்பட்டிருக்கும் தேசங்களின் விடுதலையை லட்சியமாகக் கொண்டிருக்குமானால், ஜெர்மனியும் அந்த நிலையிலேயே இருப்பதால் நம்முடைய தேசீய அரசாங்கம் இந்தக் கொள்கையை எதிர்க்கவும், இந்தத் திருட்டுச் சொத்தை வாராமல் தடுக்கவும் வேண்டியது அவசியமாகும்.

## பீடித் தொழிலுக்குப் பாதுகாப்பு

உள்ளூர்ப் பீடித்தொழில் இப்போது, இந்தியபீடி இறக்குமதியால் சீரழிந்துவிடும் நிலையில் இருக்கிறது. இதனைப் பாதுகாக்க வர்த்தகப்பகுதி அதிகாரி நடைவடிக்கை எடுக்க நிச்சயித்துள்ளார்.

1945-ம் ஆண்டு தொடக்கம், இங்கே இறக்குமதியாக்கப்படும் பீடிகள் மீது றூத்தல் ஒன்றுக்கு 4 ரூபாவீதம் இறக்குமதித் தீர்வை விதித்து, உள்ளூர்ப் பீடித் தொழிலை ஓரளவுக்கு அரசாங்கம் பாதுகாத்து வந்தது. ஆனால் இனியும் இறக்குமதித் தீர்வையை உயர்த்தினால், சோரமாக பீடி இறக்குமதியாகும் என்று வர்த்தகப்பகுதி அதிகாரி அபிப்பிராயப்படுகிறார்.

உள்ளூர்ப் பீடித் தொழிலுக்கு வேண்டிய புகையிலையிற் பெரும்பாகம் இந்தியாவிலிருந்தே இங்கு இறக்குமதியாகின்றது. இந்தப் புகையிலை மீதும் இறாத்தல் ஒன்றுக்கு 4 ரூபா வீதம் இறக்குமதி வரி விதிக்கப்பட்டு வருகிறது, இந்த வரியைக் குறைத்தால் உள்ளூர்ப் பீடித்தொழில் சற்று ஓங்கும் என்று கருதப்படுகிறது.

## தொண்டமானாறு, செல்வச்சந்நிதி மகோற்சவம்

நிகழும் விய ஹூ மாசி மீ 25-ந் உ (9-3-47) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் டி கோவில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கும், பராசக்திகளுக்கும் (1008 இராமேசுவரச் சங்குகளாலும் 11 வலம்புரிகளாலும்) சகஸ்ர மகாசங்காபிஷேகமும், அன்னபிஷேகமும் சந்தனபிஷேகமும் நடைபெறும், அன்று மாலை 6 மணியளவில் சங்காபிஷேகமகிமை என்னும் விஷயம்பற்றி உபந்நியாசம் நடைபெறும். அன்றிரவு 9 மணியளவில் திருவுலா நிகழும்.

# ஒத்துழைக்க முடியாது

## நகரசங்கத் தலைவரின் ஆட்சேபம்

யாழ்ப்பாணத்தில் அடுத்த ஆண்டு முனிசிப்பல் சங்கம் ஸ்தாபிக்கப்படவிருப்பதால், அதற்கான வட்டாரங்களைத் திருத்தியமைக்க, அவற்றின் எல்லைகள்பற்றிய விபரங்களைத் தமக்கு அனுப்பிவைக்கும்படி, அளவைப் பகுதி அதிகாரி நகரசங்கத் தலைவரைக் கேட்டிருக்கிறார். இந்தக் கேள்விக்கு இணங்கமுடியாது என்றுநகர சங்கத் தலைவர் பதிலனுப்பி அதற்கானகாரணங்களையும் பின்வருமாறு காட்டுகிறார்:

வட்டாரங்களைப் பிரிப்பது விஷயமாக, வடமாகாணத் தலைவராயிருந்தவர், வரியிறுப்போர் சங்கம் தயாரித்த திட்டத்தையே சரியென்று ஏற்றுக்கொண்டு அதனைச் சிபாரிசு செய்தனர். மாகாணத்தலைவருடைய சிபாரிசினை மத்திய அரசாங்கமும் ஏற்றுக்கொண்டது, கேவலம், பொதுஜனப் பிரதிநிதித்துவமில்லாத ஓர் வரியிறுப்போர் சங்கத் திட்டத்தை ஏற்றுக்கொண்டபின் எம்முடைய ஒத்துழைப்பாலும் உதவியாலும் பயனில்லை.

"வரியிறுப்போர் சங்கத் திட்டத்தைச் சிபாரிசு [illegible] மாகாணத் தலைவர் [illegible]

முனிசிப்பல் தேர்தலில் ஓர் அபேட்சகராகவும் நிற்கப்போகிறோம்.

"அரசாங்கம் செய்துள்ள வேலை [illegible] ஒத்துழைப்பை [illegible]."

## கொக்குவில் இளைஞர்சங்கம்

ஸ்ரீ இராமக்கிருஷ்ண — ஸ்ரீ விவேகானந்த ஜெயந்திவிழாக் கொண்டாட்டம் நிகழும் வியவருடம் மாசி மாதம் 11-ந் திகதி (23-2-47) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் கொக்குவில் கிழக்கு மனோன்மணி வாசகசாலை மண்டபத்தில் அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ இராமக்கிருஷ்ண - ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளின் படங்களுக்கு ஆராதனையுடன் விழா ஆரம்பமாயது. அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் ஈழகேசரி அதிபர் திரு. நா. பொன்னையா அவர்களின் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர் திரு. பொ கிருஷ்ணபிள்ளை அவர்கள் "விவேகானந்த சுவாமிகளும் தொண்டும்" என்னும் விஷயம் பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்தார். சாவகச்சேரி இந்துக்கல்லூரிப் பண்டிதர் திரு. க சபா ஆனந்தர் "ஸ்ரீ இராமக்கிருஷ்ணரும் ஸ்ரீவிவேகானந்தரும்" என்னும் விஷயமாக ஓர் விரிவுரை நிகழ்த்தினார். தலைவர் முடிவுரையில் இளைஞர்கள் சிறந்த வாழ்க்கை வாழ்வதற்குதவியான பல அரிய குறிப்புக்கள் கூறினார்.

நன்றி கூறியதுடன் தேவார பாராயணத்துடன் கூட்டம் நிறைவெய்தியது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

ம் பக்கத் தொடர்ச்சி

தில் எல்லாச் செல்வங்களுமிருந்தும், ''போம்போது அவளோடும்போம்'' என்றவிதமாக அந்தப் புண்ணியவதி என் வீட்டைவிட்டுப் போனபோதே என் மனத்திலிருந்த மகிழ்ச்சியும் ஆறுதலும்என்னைவிட்டு அறவேயகன்றன: அந்த உத்தமியைப்போற் சிறந்த பத்தினி இனிமேல் வந்து கிடைத்தல் அருமையென் றெண்ணியே சாமி, சிலகாலமாக ஒன்றியாகவிருந்து கவலையோடு காலங்கழித்து வந்தேன்; நான் மலாய்நாட்டை விட்டு மீண்டு இங்கு வந்துசேர்ந்த நாள்தொட்டு இற்றைவரையில், மெய்யென்று நம்புங்கள் சாமி, நல்ல சீதனத்தோடும், கல்வியறிவோடும், நாகரிகத்தோடும் கூடிய கன்னிகைகளைத் தனித்தனியே கல்யாணத் தரகர் எத்தனையோபேர் கல்யாணம் பேசிவந்தார்கள்; ஆனால், நான் ஒன்றுக்கும் இடங்கொடுக்கவில்லை' காரணம் உந்தத் தரகர்கள் பேசிய சம்பந்தம் நூற்றுக்கு ஒன்றுவிகிதம் நல்லாய் வாழ, 99 விகிதம் இடையில் மாண்டுபோவதும், புருஷன் மனைவிக்கிடையே பிணக்கு நேர்ந்து வழக்குப் பேசிக் கல்யாணம் தள்ளுவிக்கப்படுதலும் இப்படியான பல அநர்த்தங்கள்நிகழ்ந்ததை நான் நேரிற்கண்டுள்ளேன்; மேலும் முதலாந் தாரம் வாய்ப்பானவளாயிருந்து இடையில் இறந்துபோக, அவன் இரண்டாந் தாரமாக ஒரு கன்னிகையை மணமுடித்துக் கொண்டானேயானாலும், முந்திய தாரம்போற் பிந்திய தாரம் வாய்ப்பாயிராதென்றும், இரண்டு தாரம் கொண்டவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்; இப்படியே நாம் ஒன்றியாகவிருந்து காலத்தைக் கழித்துவிடலாமோ என்றால், கழித்துவிடலாம்; ஆனால் நாம் பாடுபட்டுத் தேடிய இந்தப் பொருள் பண்டம் காணிபூமி வீடுவாசல்கள் இவைகளையெல்லாம், நான் இல்லாத காலத்தில் அந்நியர்தானே அபகரித்து அநுபவிக்கப்போகிறார்களென்று நினைக்க என்மனம் சகிக்கவில்லை சாமி; எனக்குப்பின் என் பொருள் முழுவதும் தரும விஷயத்திலே சேரச் செய்துவிடலாமோ, அப்படிச் சேர்த்துவிட்டாற் போகிற வழிக்குப் புண்ணியமுண்டாகுமோ என்றால், முன்னோராலே தருமசாதனஞ் செய்யப்பட்ட சொத்தும், நிலபுலங்களும் இக்காலத்தில், தரும சாதனஞ் செய்தவர்களுடைய எண்ணத்திற்கு நேர்மாறாக, அபகரிக்கப்பட்டு, அநியாயமாகச் செலவு செய்யப்படுதலை, சாமி, நீங்களுங் காணலாம், நானும் பார்க்கலாம்; ஆனதால், அதிலும் ஒரு புண்ணியமில்லையென்று நிச்சயித்துவிட்டேன்; நான் மலடன் சந்ததியற்றவன், என்ற அவப்பெயரைக் கேளாமல், ஏதோ இருக்கு வரையிற் சிறப்பாயிருந்து அநுபவிக்கக்கூடியசுகங்களை அநுபவித்து, அந்திய காலத்தில் எனக்குரிய தீக்கடன், நீர்க்கடன் பின் சிரார்த்தம் திதி முதலியவற்றைச் செய்தற்கான ஒரு புத்திரப் பேற்றையாயினும் பெற வேண்டுமென்ற ஆசை கொண்டேன்: சாமி, விஷயத்தை வளர்த்துச் செல்வதனாலாவதென்ன? என் மனோரதங்களையெல்லாம் எனக்குத் தாரமாக வந்திருந்து நிறைவேற்றக்கூடிய லட்சணம் வாய்ந்த கன்னிகை இந்தவூரிற்றானே இருக்கின்றாளென்பதை இற்றைக்கு இரண்டு மூன்று தினங்கட்கு முந்தித்தான் நான் அறிந்தேன்,

**''கன்றினுற் கொள்வர் கறந்து''**

சாமி,

'தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியவரால் தாங்கொள்க—தங்கநெடுங்
குன்றினுற் செய்தனைய கோங்கையாய், ஆவின்பால்
கன்றினுற் கொள்வர் கறந்து.''

என்றபிரகாரம், நம்மால் நேரிற்பெற்றுக்கொள்ள முடியாத பொருள்களை அவற்றைப் பெற்றுத் தரத்தக்க தகுதியுடையவர்களைக் கொண்டே பெறமுயலுதல் வேண்டும்; எல்லாமறிந்த உங்களுக்குஅதிகஞ்சொல்வதென்ன; என்னைப்பற்றி நீங்கள் நல்லாய் அறிந்திருக்கிறீர்களென்று நினைக்கிறேன்; அந்த விநாயகமூர்த்தியின் பரம்பரை முதலியவற்றைப்பற்றியும், சாமி, நீங்கள் அவர்களுக்குப் புரோகிதராயிருத்தலினால், அறிவீர்களென்று நினைக்கிறேன்; விநாயகமூர்த்தி தம்முடைய மகனுக்குத் தம் சகோதரி மகளாகிய சிவபாக்கியத்தைக் கல்யாணஞ் செய்துவைப்பதென்று முந்தியே நிச்சயித்திருந்தவராம்; ஆனால் அவருடைய மகன் மலாய்நாட்டிற் போய் உத்தியோகமாகவிருந்தவன், யுத்தம் முடிந்து இவ்வளவு காலமாகியும் இன்னமும் மீண்டு இந்தவூருக்கு வரவில்லையாம்; தன் மகனுடைய உயிருக்கு மோசம் நேர்ந்திருக்கவேண்டுமென்றெண்ணி அவரும் மனைவியும் சுற்றத்தாரும் கவலைப்படுகின்றனராம்: இப்பொழுது விநாயகமூர்த்தி தம் மருமகளாகிய சிவபாக்கியத்துக்கு ஒரு தக்க வரன் அகப்பட்டாற் சம்பந்தஞ் செய்யும நோக்கங்கொண்டிருக்கிறாராம்; ஆனதனால் சாமி, நீங்கள் என் விஷயமாக அந்தப் பெண்ணுக்குச் சம்பந்தம்பேசி அவளை எனக்கே ஒழுங்கு பண்ணவேண்டும்: இதனை நிறைவேற்றி வைப்பீர்களானால் உங்களுக்கு வேண்டிய சன்மானஞ் செய்வதோடு, நீங்கள் செய்யும் நன்றியையும் சாகிறபரியந்தம் மறக்கமாட்டேன்' என்று சொல்லிமுடித்தான் விஜயரத்தினம்.

**''அந்தக் குடும்பத்திலே'' பெண் கொள்ளவேண்டும்''**

விஜயரத்தினஞ் சொல்லியவை முழுவதையும் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த புரோகிதர் சிறிது நேரம் யாதும் பேசாது யோசித்தவண்ணமிருந்துவிட்டுப் பின்னர் விஜயரத்தினத்தைப் பார்த்து, 'தம்பீ, நீர் சொன்னதெல்லாம் சரி, உம்முடைய கருமத்தில் நாமும் தலையிட்டு, உமக்கு எம்மால் இயன்ற உதவிசெய்யவேண்டுமென்பது எம் விருப்பம். விநாயகமூர்த்தி யென்பவர் தமது மருமகளைத் தம்மகனுக்கே கல்யாணஞ் செய்துவைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அன்று தொடக்கமிருக்கிறாரென்பதை நாம் அறிவோம். இப்பொழுது தம்மகன் கதியென்னவாயிற்றென்று அவர் கலங்கிக்கொண்டிருப்பதால் ஒருபோது நீர் சொல்லுகிற பிரகாரம் தம் மருமகளுக்கு வேறெங்கேனுஞ் சம்பந்தஞ் செய்துவைக்க வேண்டுமென விநாயகமூர்த்தி நோக்கங் கொண்டிருக்கிறாரென்பதை நாம் அறியோம். அவர்கள் ஒருவகையான ஆட்கள்; அவர்களுடைய குடும்பத்திலே சம்பந்தம்பேசி அவர்களை அதற்கு இசையச்செய்வது வெகு கஷ்டம். ஆகையால் அந்த எண்ணத்தை விட்டுவிட்டு, உமக்கு வேண்டிய, உம்முடைய மரபோடு ஒத்த மரபிலே ஒரு சிறந்த பெண்ணைப் பேசிக் கல்யாணஞ் செய்வதுதானே; வேறு நல்ல குடும்பங்களிலே நீர் சொன்ன இலட்சணங்களெல்லாவற்றோடுங் கூடிய கன்னியர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்களென்பதை நாம்புரோகிதராதலினால், அந்த அந்த வீடுகட்குப் போகும் வேளைகளில் அவதானித்து வைத்திருக்கிறோம். அப்படிப்பட்ட இடங்களிலே குமர் வைத்திருக்கிற பெற்றார் சிலர், ''சாமி, எங்கள் பிள்ளைக்கு எங்கேனும் தக்கவரன் தேடிப்பார்த்தறிந்து அகப்பட்டால் எங்களுக்குச் சொல்லுங்கள்; உங்களுக்குப் பெரும் புண்ணியங் கிடைக்கும்'' என்று எம்மிடம் பலமுறை சொல்லியிருக்கிறார்கள்: ஆனதனால், அப்படியான பெண்களில் உமக்கு இசைந்ததாய் நாம் போய்ப் பேசி ஒழுங்குபண்ணலாமென்று நினைக்கிறோம்; உமது நோக்கமென்ன, சொல்லுந் தம்பி'' என்றார்; ''சாமி, நீங்கள் சொல்வது நிசந்தான்; உங்களால் அப்படியெல்லாம் செய்துவைக்க முடியுமென்பதையும் நான் அறிவேன்; ஆனால், சாமி உங்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசுகிறேனென்று என்மேற்கோபிக்காதீர்கள்; அந்தக் கன்னிகையும் எல்லாவற்றினுஞ் சிறந்த பெண்ணெனக் கேள்வி; அதுமாத்திரமல்லாமல், அந்தக் குடும்பத்திலே ஒருபெண் கொள்ளவேண்டுமென்பதுவே என்னுடைய வேணவா; மேலுந் தாங்கள் அந்த விஷயத்திலே தலையிட்டால், அக்கருமம் தவறுமற் கைகூடுமென்பது என் நம்பிக்கை''யென்று ஐயரைப் பெரிதும் இரந்து வேண்டினான் விஜயரத்தினம்.

**''புல்லென்றாலுங் கணவன், கல்லென்றாலும் புருஷன்''**

ஐயர் அவனை நோக்கி, ''தம்பீ, குறிப்பாக உமக்குச் சொன்னேம்: நீர் அதை விளங்கிக்கொள்ளவில்லையெனப் புலப்படுகிறது; இந்த யாழ்ப்பாணத்திலே இந்தநாளிற்சாதிபேதம் பாராக்கமுடியாது உயர்ச்சி தாழ்ச்சி யென்னுமிவைகளைப்பற்றி பேசக்கவொண்ணாது உலகந் திருந்திவருகிறது அதற்குத் தக்கதாக நாங்களுந் திருந்திக்கொள்ள வேண்டுமென்று பேசிக்கொள்வார்கள்; பிரசங்கம் பண்ணுவார்கள்; பத்திரிகைகளிலும் எழுதிவிடுவார்கள்; மற்றையவர்கள் விஷயத்திலே காலத்திற்குத் தக்க கோலமென்று புத்திசொல்லி அவர்களைத் தூண்டிப் பேதம் பாராது கலந்து ஊடாடவும் அவர்களைக்கொண்டு செய்வித்துவிடுவார்கள்; ஆனால் தங்கள் சொந்தக் குடும்ப விஷயங்களிலென்றாலோ, அவைகளையெல்லாம் மறந்து, மிகவும் நுட்பமாகச் சாதிபேதம் ஏற்றந் தாழ்ச்சி பார்ப்பார்கள்; இது வேளாளர்களாகிய உங்களுக்குள் மாத்திரமல்ல, எங்கள் பிராமணச் சாதியிலும் இன்றும் உண்டு ஏனைய சாதியினரிடத்துமுண்டு; நீர் சொல்லும் அந்த விநாயகமூர்த்தி குடும்பத்தினர் இங்குள்ள வேளாண் மக்களுள், தாங்களேசாதித் தலைப்பு என்று பேசப் பலமுறையுங் கேட்டிருக்கிறோம்; ஆருமற்றது தாரம், ஊரிலேயொருத்தன்தோழன் என்று உலகத்திலே சொல்லுவார்கள்; நாம் நம்மோடு ஒத்த மரபினரென்றிருக்கும் குடும்பத்தினரிடத்திலேபோய்ச் சம்பந்தம் பேசலாம்; சம்மதித்து வந்தாற் பெண் கொள்ளலாம்; அப்படி யகப்படவில்லையேல், கன்னிகையைக் கடையிலுங் கொள்ளலாமென்றபடி, நம்மிலுஞ்சற்றுத்தாழ்ந்த மரபிலும் சம்பந்தஞ்செய்துகொள்ளலாம்; இதனை விட்டுச் சாதி மரபிலே ஏறவேண்டுமென்று ஆசைப்பட்டுப் போய்ச் சம்பந்தஞ் செய்தால், அப்படிச் செய்யும் ஆடவன் தனக்குமாத்திரமல்லாமல் தன் இனசனத்தாருக்கும் தாழ்ச்சியையும் வசையையும் தேடிவிடுகிறான்: இவன் எங்கள் வமிசத்திற் பெண்ணெடுக்கத் தக்கவனோ பணத்திற்கு ஆசைப்பட்டு நம்முடைய ஆட்கள் சாதி மரபு பாராமற் சம்பந்தஞ்செய்துவிட்டார்கள் என்று இப்படியெல்லாஞ் சொல்லி அந்த ஆடவனையும் பெண்ணுடைய மரபினரையும் எள்ளுவார்கள்; இனி, அவனுக்கென வந்த பெண் நல்லவளாயிருந்தால் கல்லென்றாலுங் கணவன், புல்லென்றாலும் புருஷன் என்று அவனை மதித்து நடப்பாள்: அப்படியில்லாதவளாயிருந்தால், சாதி மரபுச் செருக்குக் கொண்டு, கொண்ட கணவனையும் அவமதிப்பாக நடத்தத் துணிவாள்; சாதி மரபில் உயரலாமென்று எண்ணிச் சம்பந்தஞ் செய்யப் புகுபட்ட இவனும் ஐயோ, நம்மோடு ஒத்த மரபினளாகிய ஒரு கன்னிகையைக் கல்யாணம் முடித்திருந்தால் எனக்கும் என் இனசனத்தாருக்கும் இப்படி அவமானம் நேராதே, நாங்கள்மரியாதையோடு ஒற்றுமையாய் வாழ்வோமே; இப்பொழுது குடித்தனத்தைக் கொண்டு நடத்தவும் விட்டுப் பிரியவும் முடியாமல் இருதலைக்கொள்ளியிலுள் எறும்பு போல நின்று கலங்குகின்றேனே; என்று சொல்லிச் சஞ்சலப்படவேண்டி நேரும்; தம்பி, நாம் உங்கள் சாதியினருட் பல குடும்பத்திற்குப் புரோகிதராயிருக்கிறோம்; எம் அனுபவத்திற் கண்ட உண்மைகளையே இப்பொழுது உமக்குத் தொகுத்துச் சொன்னேம்: மேலும் ஒருவன் உயர்ந்த மரபிலே பெண் கொள்வதனால் தானும் உயர்ந்து விடுவானென்று எண்ணுவது தவறு;

மறப்பினும் ஒத்துக்கொளலாகும் பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கங்குன்றக் கெடும்

என்று திருவள்ளுவப் பெரியார் விசேஷமாக எங்கள் குலத்தைக் குறித்துச் சொன்னாரெனினும், அவருடைய வாக்கை எல்லாரும் தங்கள் தங்கள் குலத்திற்கும் ஒழுக்கத்திற்கும் பொதுவாகத்தான் கொண்டு நடக்கவேண்டும்; சாதி மரபு வேறு, ஒழுக்கம் வேறென்பதை மறந்துவிடவொண்ணாது தம்பீ'' என்று சொல்லி முடித்தார்.

(வரும்)

## காலநிலை

சென்ற சிவராத்திரி புண்ணிய தினத்தன்றிரவும் அடுத்தநாள் மத்தியானம் வரையும் பெய்த மழை இங்குள்ள விவசாயிகளை அரிவிகையிடாமல் தடுத்துவிட்டது' அந்த மழை காரணமாக வயலில் நிற்கும் வெள்ளம் வற்றியபின்பு அரிவிகையிடலாமெனக் காத்திருந்த விவசாயிகள் பின்னரும் மழைக்கோலங் காணப்பட்டு வந்தமையினால் அரிவிகையிடுதற்குப் பயந்திருந்தார்கள். இப்படியிருக்க, சென்ற இரவு தொடக்கம் இப்பொழுதும் இடையிடையே மழை தூறுகிறது; பல வயல்களில் உதிர்ந்த நெல்மணிகள் முளைகொண்டுவிட்டன; மழையாக, மழைக்கோலமாக இன்னமும் இந்த நிலையில் நிற்குமானால் இந்த ஆண்டில் இங்கே விளைந்த நெல்லுச் சிதைவுறுமென அஞ்சக்கிடக்கின்றது; இதனால், தங்கள் அற்பமான வயல் மூலமாக இந்தப் பஞ்சகாலத்திலே ஏதும நெல் கிடைக்குமெனநம்பியிருக்கும் சின்ன விவசாயிகள் பெரிதுங் கவலைப்பட, ''எரிகிற வீட்டிலே பிடுங்கின தறுதி'' என்ற முறையில், அரிசிநெற் தட்டுப்பாட்டுப் பஞ்சத்தினால் ஏழைகள் உணவின்றி வருந்துவதாகிய ஆபத்துக்காலத்தில், ஒரு புசல் நெல் முப்பது முப்பத்தைந்து ரூபா விகிதம் அநியாய விலைக்குச் சோரமுறையில் விற்கும் பெரிய விவசாயிகள் அதிக கவலைப்படுகின்றார்களாம், ''அஃகஞ் சுருக்கேல்''


## தேவை

நாயன்மார்கட்டு ஐக்கிய பண்டசாலைக்கு ஒரு மனேஜர் தேவை. வியாபார அனுபவம் உடையவராயிருத்தல் வேண்டும். பிணைப்பணம் ரூபா 500 மாத வேதனம் ரூபா 50. விண்ணப்பப்பத்திரம் நன்னடத்தைப் பத்திரத்துடன் 8-3-47 க்கு பிந்தாமல் மேற்படி சங்கக் காரியதரிசிக்கு அனுப்பவேண்டும்.

சி. சிவபாதசுந்தரம்
ஷை பண்டசாலைக் காரியதரிசி
நாயன்மார்கட்டு
24—2—47.
M. 320 25—28-2-47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸ்ற் கர்பனி.

**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ் வங்கி

**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை.

**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்,

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**

இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**

ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**

இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**

அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**

இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**

ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்,

E. C. G. விக்கிரமசிங்க,
ஏஜெண்டு,

(Mis 137 2-8—31-7-47)



# இந்துசாதனம்

## ஆங்கில - தமிழ்ப் பிரசுரங்கள்

**பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)**

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்டப்படல் வேண்டும்,

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


## தமிழன் படும்பாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி

றன. தமிழ்க்கவியொருவன், தினைப் புனத்தில் வள்ளிநாய்ச்சியாரோடு முருகன் காதலாட்டயர்ந்த செய்கையைச் சிருட்டித்தலுறுவனேல். முருகனும் வள்ளியும் நகைமுகங்கொண்ட நல்லுரையை மட்டும் கற்பனை செய்திரான். பக்கலில் நின்ற விலங்கினங்கள், பறவைகள் ஆணும் பெண்ணுமாய் ஒன்றினொன்று வேட்கை மீதூரப்பெற்று ஒன்றையொன்று அன்புற்றணைந்துந் தழுவியும் இன்பந்துய்க்குமாற்றையுங் கற்பனைசெய்வானல்லனோ? பணம் பறிக்கும் படமுதலாளிகள் தமிழ்க்கலை யுணர்ச்சியின்மையால் மாடுகள் தண்ணீர் பருகவும் பறவைகள் இரைதேடவுஞ் சித்திரங்கள் அமைக்கின்றனர்.

-வரும்.

## கல்வித் திட்டம்

கல்வித் திட்டம் சம்பந்தமான மசோதா மார்ச் மாதம் 6-ந் திகதி அரசாங்கசபையில் விவாதிக்கப்படும்.


உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

*

அப்படியானல்

இந்துசாதனத்தில்

விளம்பரஞ் செய்யுங்கள்



# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)



# தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைதது கடைசியன்று சியரக்காய் வெந்தயம் அவித்துத் தட்பி வெந்நீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம.

Mis 211 1.11.46—30-4-47 (வெ)


விளம்பரமின்றேல் பெரும் பணமில்லை


# India Super Tyres and Tubes

## இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்

கார் லொறி சைக்கிள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம் 21-ந்உ யுடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால் தேவையானதற்கு இப்பொழுதே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

C. S. Nadarajah Chetty,
41, K. K. S. Road, JAFFNA.

Mis 257 3-12—28-2-47



# NEW IRON SAFES FOR SALE

## புதிய இரும்புப் பெட்டிகள்

விற்பனைக்கு வந்துவிட்டன

**யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி**

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele {Phone 68
{grams SIRIRANGAN

S. S. PONNUDURAI
Siri. Pathmanatha Store
105. K. K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13-12.46—12-3-47


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai. Jaffna, on Ftiday, February, 28, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org